**செய்தி வெளியீடு எண்.061** **நாள்.21.1.2008**

## மூன்று இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் என்னும் இந்த ஆண்டின் இலக்கை விஞ்சி சாதனை!

## 3 இலட்சத்து ஒன்றாவது இலவச வீட்டுமனைப்பட்டா 2500 கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பணி நியமன ஆணைகள்!

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்!

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்கும் காலங்களில் எல்லாம் வீடில்லாத ஏழை எளியவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதில் தனிக் கவனம் செலுத்தி வரலாறு படைத்து வந்துள்ளது.

2006 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்றபின், 2006–2007 ஆம் ஆண்டில் 76 ஆயிரத்து 622 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

1.4.2007 முதல் 30.7.2007 வரை 58 ஆயிரம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருந்த நிலையில், 31.7.2007 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நடப்பு 2007–2008 ஆம் ஆண்டில் 3 இலட்சம் ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்படும் என அறிவித்தார்கள். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து 2 இலட்சத்து 42 ஆயிரம் வீடில்லாத ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு, இந்த ஆண்டில் 3 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்ற இலக்கு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே இலக்கினை விஞ்சி சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளதன் அடையாளமாக, மூன்று இலட்சத்து ஒன்றாவது இலவச வீட்டுமனைப் பட்டாவை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (21.1.2008) தலைமைச் செயலகத்தில் வழங்கி மகிழ்ந்தார்கள்.

முந்தைய அதிமுக ஆட்சிக் காலத்தில் வேலை நியமனத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டு, அரசுத் துறைகளில் புதிய பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவது நிறுத்தப்பட்டதால் அரசுத் திட்டங்களின் பல்வேறு பணிகள்

முடங்கிக் கிடந்ததைச் சுட்டிக்காட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றால் அரசுப் பணிகளில் காலியாக உள்ள இடங்களில் மூன்று இலட்சம் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் எனத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டதற்கேற்ப, இதுவரை 2 இலட்சத்து 32 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு அரசுப் பணிகளில் வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் கிராமப் புறங்களில் பொதுமக்களின் உடனடித் தேவைகளை உடனுக்குடன் கவனித்து நிறைவேற்றுவதில் முக்கியப் பொறுப்பு வகிக்கும் கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள் பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் இருந்ததால், 30.6.2006 வரை காலியாக இருந்த 2 ஆயிரத்து 500 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டு, உரிய விதிமுறைகளின்படி 2 ஆயிரத்து 500 கிராம நிர்வாக அலுவலர்கள் வெற்றிகரமாகத் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு உரிய பணிநியமன ஆணைகள் வழங்கும் பணிகளை முதலமைச்சர் கலைஞர் இன்று (21.1.2008) தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வுகளின்போது வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., வருவாய்த் துறைச் செயலாளர் திரு. அம்புஜ் சர்மா, இ.ஆ.ப., நில நிர்வாகத் துறை கூடுதல் ஆணையர் திரு. பி.எம். பஷீர் அகமது, இ.ஆ.ப., வருவாய் நிர்வாகத்துறை இணை ஆணையர் திரு.டி.இராஜேந்திரன், இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் ராஜேந்திர குமார், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.